

தமிழ்நாடு தகவல் ஆணையம்
பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை–600 035.
தொலைபேசி எண்.044–2951 5590

ஆணை நாள். 02.11.2026

முன்னிலை

திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,
மாநில தகவல் ஆணையர்

*****

வழக்கு எண் : SA- 12726/A/2025

திருமதி.A.மகாலெட்சுமி – மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
தலைமையிடம்,
பெரம்பலூர் மாவட்டம் – 621 212. – பொது அதிகார அமைப்பு

ஆணை

மேற்குறிப்பிட்ட வழக்கு 02.11.2026 அன்று ஆணையத்தில் வைத்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திருமதி.A.மகாலெட்சுமி அவர்கள் நேரில் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)–ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். பொது அதிகார அமைப்பின் சார்பாக, திரு.ம. பாரதிதாசன், பொதுத் தகவல் அலுவலர் / கூடுதல் கண்காணிப்பாளர், தலைமையிடம், பெரம்பலூர் மாவட்டம் அவர்கள் இன்றைய விசாரணைக்கு ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 8(2)–ன்படி பொதுத் தகவல் அலுவலர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஆணையம் இதனை பதிவு செய்கின்றது. அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக திரு.மயில்சாமி, துணை காவல் கண்காணிப்பாளர், மாவட்ட காவல் அலுவலகம், பெரம்பலூர் மாவட்டம் அவர்கள் இன்றைய விசாரணைக்கு நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 11.03.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)–ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், எதிர் மனுதாரர் ரெஜினாமேரி கோடுத்த புகார் மற்றும் விசாரணையின் போது சமர்ப்பித்த ஆவணங்கள் மற்றும்

வாக்கு நகல் சார்ந்து தகவல்களை வழங்கக் கோரி 5 இனங்களில் விண்ணப்பித்துள்ளார்.

3. பொது தகவல் அலுவலர் 01.04.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் பதில் வழங்கியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் பதில் திருப்தி அளிக்காத காரணத்தினால் மனுதாரர் 30.04.2024 நாளிட்ட பிரிவு 19(1)–ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். மேல் முறையீட்டு அலுவலர் 11.05.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் பதில் வழங்கியுள்ளார். மேல் முறையீட்டு அலுவலர் பதில் திருப்தி அளிக்காத காரணத்தினால் மனுதாரர், 26.09.2024 நாளிட்ட பிரிவு 19(3)–ன் கீழ் இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். அம்மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 02.11.2026 முற்பகல் ஆணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு ஏற்கனவே 01.04.2024 மற்றும் 11.05.2024 நாளிட்ட கடிதம் வாயிலாக முழுமையான தகவல்களை வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகல் மற்றும் மனுதாரர் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது, இவ்வாணையத்தால் உறுதி செய்யப்பட்டு, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

ஒம்/– (வி.பி.ஆர். இளம்பரிதி)
மாநில தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண் SA- 12726/A/2025</u>

பொதுத் தகவல் அலுவலர்/
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்,
தலைமையிடம்,
பெரம்பலூர் மாவட்டம் – 621 212.

<u>மனுதாரர்:</u>
திருமதி.A.மகாலெட்சுமி,
5, சங்கரா நகர், 2வது தெரு,
பிச்சாண்டார் கோவில்,
1, டோல்கேட்,
மண்ணச்சநல்லூர் தாலுகா,
திருச்சிராப்பள்ளி மாவட்டம் – 621 216.

Copy to File
Je/PA 02.11.2026